**தென் மாகாண சபையி**

---------------------------------

தென் மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

02. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தென் மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் கணக்கு 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 742,171,657 தொகையான மாகாண சபை திரண்ட நிதியத்தின் மீதி 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,765,001,880 வரை ரூபா 2,022,830,223 தொகையால் அதிகரித்திருந்தது.

2.2.2 ஏனைய கணக்குகள்

2016 மார்ச் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் மீளாய்வாண்டிற்கான ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தலின் செயல்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 25 | 22 | 03 |
| (ii) | வருமானக் கணக்குகள் | 25 | 20 | 05 |
| (iii) | மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 91 | 76 | 15 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 11 | 06 | 05 |
| (v) | நிதியக் கணக்குகள் | 07 | 05 | 02 |
| (vi) | நியதிச் சட்ட கணக்குகள் | 05 | 01 | 04 |
| (vii) | விசேட முற்பணக் கணக்குகள் | 01 | - | 01 |
| | மொத்தம் | 165 | 130 | 35 |

2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதியத்தின் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 692,504,844 கூட்டுமொத்தமான நிலுவை வருமானம் கிடைக்க வேண்டிய வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிலுவை வருமானமாக அறிக்கையிடப்படாத நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய இரண்டு மாதங்களுக்காக 2016 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் கிடைத்த ரூபா 57,482,884 தொகையான வாகனங்களைப் பதிவுசெய்தல் வருமானம் மாகாண சபை வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அட்டுறு அடிப்படை கடைபிடிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) குத்தகை வாடகை வசதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 100 வாகனங்களின் தவணைப் பணமாக ரூபா 102,093,420 பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் மேலும் செலுத்தப்பட வேண்டிய ரூபா 199,159,592 தொகையான தவணைப் பணமும் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்வதற்காக கடைபிடிக்கப்பட்ட அடிப்படையானது கணக்கீட்டுக் கொள்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மாகாண சபை தொடங்கியதிலிருந்து மத்திய அரசாங்கத்தினாலும் மாகாண சபையினாலும் குறிப்பிடத்தக்க அளவில் செலவினைச் செய்து நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 78,583,111 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,599,436,856 கூட்டு மொத்தமான நிலையான சொத்துக்களின் மீதிகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் நிதியக் கணக்குகளில் இது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 106,436,440 கூட்டு மொத்தமான பொறுப்புக்கள் செலவுகளின் கீழும் அதேபோல் அட்டுறுச் செலவுகளாகவும் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட எழுதுகருவிகள் மற்றும் ஏனைய பாவனைப் பொருள் இருப்புக்களில் வருட இறுதியில் உள்ளவாறு எஞ்சியுள்ள இருப்புக்களைக் கணித்து அப்பெறுமதியை நிதி நிலைமைக்கூற்றில் நிதிசார் சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கொள்ளப்பட்ட முழுச் செலவும் நிதிசார் செயலாற்றல் கூற்றில் ஆண்டிற்கான செலவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 8,818,667 கூட்டு மொத்தமான நிலையான வைப்பு வட்டியானது வருமான விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் ரூபா 87,148 தொகையும் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 23,642 தொகையும் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) வழிக்காசு

-----------------

(i) மாகாண சபை நிதியக் கணக்கின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 58,601,102 தொகையான வழிக்காசு மீதியும் அத்திகதியில் மேலதிகமாகக் கிடைத்த ரூபா 13,769,149 பணம் நிதி நிலைமைக்கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் வெவ்வேறாகக் காட்டப்படாது அம்மீதி ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட்டு ரூபா 44,831,953 தொகையான தேறிய வேறுபாடு ஏனைய நிதிச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு மேலதிகமாக மிகைப் பெறுவனவுகளாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 13,769,149 தொகையானது உருவாகிய விதத்தைப் போல இவ்வாறு மேலதிகமாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டது எவ்வாறு என்பது தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 கணக்குகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 56,358,512 தொகையான வழிக்காசு 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. இதற்கிணங்க, இப்பெறுமதியானது வழிக்காசு இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) மத்திய அரசாங்கத்தின் விவசாய அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 286,134 பணம் உரிய செயற்திட்டம் செயற்படுத்தப்படாமையின் காரணமாக திருப்பி அனுப்பப்பட்டிருந்த போதிலும் மீண்டும் ஏனைய மானியப் பெறுவனவுகளின் கீழும் அரசாங்க முதலீடுகளின் கீழும் காட்டப்பட்டிருந்தது. இக்காரணத்தினால் அந்த இரண்டு கணக்குகளின் பெறுமதி சமமான பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

2.2.5 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 2,818,968,388 கூட்டுமொத்தமான 4 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அது தொடர்பான துணை ஏடுகளிலும் அறிக்கைகளிலும் காட்டப்பட்ட மீதிகளுக்குமிடையே அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகளின் கூட்டுமொத்தம் ரூபா 35,333,970 ஆகும்.

2.2.6 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

-------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனைத்து வலயங்களுக்கிடையிலான கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் ரூபா 26,673,492 ஆகவும் கடன்கொடுத்தோர் மீதிகளின் மொத்தம் ரூபா 5,211,813 ஆகவும் இருந்ததனால் அனைத்து வலயங்களுக்கிடையிலான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளுக்கிடையே ரூபா 21,461,679 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலி வலயத்தில் பொது வைப்புக்களின் தனித்தனி மீதிப் பட்டியலின் மொத்தம் ரூபா 1,636,089 ஆக இருந்த போதிலும் கணக்குகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 28,276,994 ஆக இருந்ததனால் மீதிகளுக்கிடையே ரூபா 26,640,905 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

2.2.7 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் தொங்கல் கணக்கில் ரூபா 33,513 வரவு மீதி ஒன்று காணப்பட்டிருந்தும் அதற்கு தாக்கமளித்த வித்தியாசங்களை இனங்கண்டு உரிய செம்மையாக்கல்களைச் செய்து கணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.8 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாணத் திணைக்களத்திற்காக முற்பணங்களின் கீழ் தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,614,080 தொகையான கடன் மீதி பல ஆண்டுகளாக அறவிடப்படாது தொடர்ச்சியாக மாற்றமின்றி நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்படுகின்ற போதிலும் அம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

நிதிச் சொத்துக்களின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் ரூபா 785,991,308 தொகையான மீதிக்குள் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 6518 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 102,394,948 கூட்டுமொத்தமான கடன் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

| விபரம் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் |
|---|---|---|
| | | ரூபா. |
| இடமாற்றம் பெற்றுச் சென்றோர் | 5,765 | 88,621,561 |
| ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்தோர் | 387 | 9,115,789 |
| வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டோர் | 201 | 3,195,106 |
| பதவியை வறிதாக்கியோர் | 165 | 1,462,492 |
| | 6,518 | 102,394,948 |

(இ) தென் மாகாணத்திலுள்ள நிறுவனங்களைப் போல ஏனைய மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த 3434 உத்தியோகத்தர்கள் தொடர்பாகச் செலுத்த வேண்டிய ரூபா 55,400,119 தொகையான கடன் மீதிகள் தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டன.

(ஈ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மரபுரீதியான ஊட்டச்சத்துள்ள பழைய நெல் வகைகளை பிரசித்தப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹோமாகம் மற்றும் ஹம்பாந்தோட்டையிலுள்ள இரண்டு விவசாய சங்கங்களுக்கு 2008 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் ரூபா 2,028,939 மற்றும் ரூபா 205,883 தொகைகளான நிலுவை வட்டியானது 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அறவிட வேண்டிக் காணப்பட்டது.

(உ) 2011 நவம்பர் மாதத்திலிருந்து 2012 பெப்ரவரி மாதம் வரையான காலத்தினுள் மோட்டார் சைக்கிள் கடனைப் பெற்றுக்கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் 14 உறுப்பினர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 427,200 தொகை அறவிடவேண்டியிருந்தது. அவற்றில் ரூபா 412,390 தொகையானது உறுப்பினர் பதவியைக் கைவிட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 10 உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய கடன் மீதிகளாகும்.

2.2.9 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட ஒவ்வொரு விடயத்திற்கும் முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகளைச் சமர்ப்பிக்காததன் காரணமாக கணக்காய்வின் போது அவற்றை திருப்தியாகப் பரிசோதனை செய்யமுடியாதிருந்தது.

| | கணக்குகளின் விபரம் | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதி | வழங்கப்படாத எழுத்துமூலச் சான்று |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| 1. | காணிகளும் கட்டிடங்களும் | 81,258,071 | உரித்து உறுதி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் |
| 2. | ஏனைய வருமானங்கள் | 22,400,000 | கணிக்கப்பட்ட முறையைக் காட்டும் துணைப் பதிவேடுகள் |
| 3. | செயற்திட்ட கடன்கொடுத்தோர் | 20,000,000 | கோவைகள், ஏடுகள் மீதிகள் உறுதிப்படுத்தல் |
| 4. | செயற்திட்ட வருமானங்கள் | 1,877,814,443 | 2011 இலிருந்து 2015 வரையான செயற்திட்டங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் |

2.2.10 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | தொகை | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 2014 இன் 8 ஆம் இலக்க மற்றும் 2015 இன் 9 ஆம் இலக்க (திருத்திய) அதிகாரச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதிய sec/2013/07 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சுற்றுநிருபம் | 383,589 | கீழே விபரிக்கப்பட்டுள்ள நிறுவன ங்களால் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.<br><br>i. தென் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் 4 உத்தியோகத்தர்களிடமிருந்தும் சேவையில் ஈடுபடாதிருந்த 4 நபர்களிடமிருந்தும் குறைத்து வரி அறவிடப்பட்டிருந்தது.<br><br>ii. தென்மாகாண பயணிகள் போக்கு வரத்து அதிகாரசபை: |

| | | | |
|---|---|---|---|
| | | - | • 3 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டில் 4 மாதங்களுக் காக மாத்திரம் வரி அறவிடப்பட் டிருந்தது. |
| | | 38,400 | • 10 சதவீத வரிப்பணம் குறைக்கப் படாது பணிப்பாளர் சபைப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| | | - | • வரிச் சுற்றுநிருபம் இலக்கம் 7 இன் பிரகாரம் குறைக்கப்பட வேண்டிய தலைவர் படிக்காக வரிச் சுற்றுநிருபம் இலக்கம் 1 இன் கீழ் மீளாய்வாண்டின் 8 மாதங்களுக்காக வரி குறைக்கப் பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571(2) | 47,927,592 | வைப்புச் செய்யப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்த 10 நிறுவனங்களுக்குரிய 621 காலங் கடந்த வைப்பு மீதிகள் தொடர்பாக தொடர்புபட்ட பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | - | கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சிற்குச் சொந்தமான 12 வாகனங்களுக்காக 2015 ஆம் ஆண்டிற்கான 116 நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த பொழிப்புக் களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | மாகாண நிதி விதி | | |
| (i) | விதி 54.1 | 161,872 | தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கெப் வாகனம் இரண்டு சந்தர்ப்பங்களில் விபத்துக் குள்ளாகியதனால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொலிசுக்கு அறிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 54.5 மற்றும் 54.6 | - | தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் ஒரு வாகனத்திற்கு ஏற்பட்ட 02 விபத்துக்கள் சம்பந்தமாகவும் மாகாண விவசாய… அமைச்சிற்குச் சொந்தமான 05 வாகனங்களுக்கு ஏற்பட்ட 05 விபத்துக்கள் சம்பந்தமாகவும் தொடர்பு பட்ட நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | விதி 59 | - | தென் மாகாண கல்வி அமைச்சு மற்றும் தென் மாகாண கல்வித் திணைக்களத்தி னால் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | விதி 118 | 7,807,393 | தென் மாகாண வீதிப் பயணிகள் போக்கு வரத்து அதிகார சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்யப்படாத 38 வைப்பு மீதிகள் அவதானிக்கப்பட்டன. |
| (v) | விதி 259.2 | - | நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப் புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 253,590,031 தொகையான தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதிக் கணக்கு மீதிகளில் 02 நிறுவனங்களுக்குரிய ரூபா 89,159,032 கூட்டு மொத்தமான மீதிகள் 2016 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படவில்லை என்பது அவதானிக் கப்பட்டது. |
| (vi) | விதி 261.2.2 | - | பிரதம செயலாளரின் முன் அனுமதி பெற்றுக் கொள்ளப்படாது லபுதுவ கமத் பண்ணை பயிற்சி முகாமையாளருக்கு கண்காட்சிக்காக 2015 ஜூலை 27 ஆந் திகதி ரூபா 183,000 தொகையான உப கட்டுநிதி வழங்கப்பட்டது. |
| (vii) | விதி 270.1 | 387,388 | தென் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் 2015 திசெம்பர் மாதத்திற்கான வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத 61 வைப்பு மீதிகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. |
| (viii) | விதி 283.4 | 3,494,438 | 4 நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப் படாது 06 மாதங்களைக் கடந்த 159 காசோலைகள் சம்பந்தமாக தொடர்புபட்ட விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ix) | விதிகள் 560 மற்றும் 561 மற்றும் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | - | தென் மாகாண கல்வி… அமைச்சு மற்றும் மாகாண கல்வித் திணைக்களத்தைப் போல தென் மாகாண வருமானத் திணைக்களத்தினால் நிலையான சொத்து க்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | திறைசேரி சுற்றுநிருபம்<br>----------------------------------------<br>2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | - | மாகாண கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களம் என்பவற்றைப் போல மாகாண வருமானத் திணைக்களத்தினாலும் கணனி துணைக் கருவிகள், மென் பொருட்கள் என்பவற்றிற்காக தனியான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டி ருக்கவில்லை. |
| (உ) | 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 437 ஆம் இலக்க மற்றும் 2015 ஜூலை 14 ஆந் திகதிய 4/2015 | - | மாகாண வருமானத் திணைக்களத்திற்குச் சொந்தமான 4 வாகனங்களுக்கும் பெலியத்த மருந்து உற்பத்தி நிலையத்திற்குச் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபம் | | சொந்தமான 2 வாகனங் களுக்குமான காப்புறுதிப் பத்திரங்கள் விற்பனை முகவர்களினூடாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. |

(ஊ) பொது நிருவாகச் சுற்றுநிருபம்

| | | | |
|---|---|---|---|
| (i) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2.11 ஆம் பந்தி | - | 06 மாதங்களுக்கு ஒரு தடவை அரசாங்க வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் ஆறு மாகாண நிறுவனங்களு க்குச் சொந்தமான 115 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | 2004 திசெம்பர் 27 ஆந் திகதிய 22/99(iv)-2004 ஆம் இலக்க சுற்றுநிருபம் | - | 2015 மே மாதத்திலிருந்து 2016 ஆகஸ்ட் வரை ரூபா 350 மாதாந்த கட்டணத்தைச் செலுத்தாது கூட்டுறவு ஆணையாளரால் உத்தியோகபூர்வ வாகனங்கள் தனிப்பட்ட பயணங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டி ருந்தன. |
| (iii) | 1985 மே 10 ஆந் திகதிய 289 ஆம் இலக்க மற்றும் 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க சுற்றுநிருப கடிதம் | - | தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான 09 குழாம் வாகனங்களில் அரசாங்க இலச்சினையும் நிறுவனத்தின் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 93/5 ஆம் இலக்க 1974 சனவரி 10 ஆந் திகதிய இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு விதிக் கோவையின் 43(1) ஆம் விதி | - | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற் காக ரூபா 2,141,543 தொகையான நிலையான சொத்துக்களையும் ரூபா 47,000 தொகையான எழுது கருவிகளையும் கொள்வனவு செய்வதற்கு அதே போல் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக ரூபா 434,303 தொகை கூட்டுறவு நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டிரு ந்தது. |

2.2.11 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் 09 நடவடிக்கைகளுக்குரிய எல்லைகளை மிகைத்தல் 12 சந்தர்ப்பங்களும் 07 கணக்கு நடவடிக்கைகளுக்குரிய எல்லைகளை அடைந்துகொள்ளாமை 07 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,465,460 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளதும் துணைக்கருவிகளதும் அச்சிடுதல் இயந்திரங்களினதும் பெறுமதியை உரிய செலவு

விடயத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தால் அச்செலவு விடயங்களின் மதிப்பீட்டு எல்லை ரூபா 1,342,786 தொகையால் மிகைப்பதனைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கில் நிதி ஏற்பாடு எஞ்சியுள்ள செலவு விடயமொன்றின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 12 செலவு விடயங்களின் நிதி ஏற்பாட்டு எல்லை மிகைத்ததன் காரணமாக திசெம்பர் மாதத்திற்கான செலவுகள் அச்செலவு விடயங்களுக்கு மிகைக் கட்டணமிடப்பட்டு ஏனைய 08 செலவு விடயங்களுக்குச் சேர்க்கப்பட்டிருந்தன. இச்செலவுகளை சரியான செலவு விடயங்களுக்கு கணக்கீடு செய்யப்படுமாயிருந்தால் ரூபா 54,734,861 தொகையான செலவுகளின் மிகைகள் உருவாகியிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மாகாண கல்வி அமைச்சின் 04 செலவு விடயங்களுக்கான நிதி ஏற்பாட்டு எல்லைகளை மிகைத்து செலவு செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 12,655,201 தொகையான மிகைச் செலவுகள் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(உ) (i) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அமைய அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 14 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,911,986 தொகை சம்பளமும் படிகளுமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2010 திசெம்பர் மாதத்திலிருந்து 2014 ஜூன் மாதம் வரையான காலத்தின் போது அதிகாரசபையின் 05 நிரந்தர சாரதிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பதவியணிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016 ஜூன் மாதம் வரை அதிகாரசபையினால் அவர்களுக்கு ரூபா 4,095,465 மொத்த தொகையான சம்பளங்களும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) தென் மாகாண பிரதம செயலாளரின் 2015 யூலை 03 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சந்தை விலை கோரல் முறைமையின் கீழ் பிராந்திய கொள்வனவுக் குழுவின் அதிகார எல்லை ரூபா 500,000 ஆக இருத்தல் வேண்டும். மதிப்பீட்டுத் தொகை ரூபா 2,100,000 ஆன தங்தெனிய உப அலுவலக நிர்மாண வேலை தொடர்பாக பிராந்திய கொள்வனவுக் குழுவினால் அதிகார எல்லையை மிகைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(எ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக நியமிக்கப்பட்ட பொருள் மெய்மையாய்வுச் சபையினால் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரப் பொறுப்பை மிகைத்து பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- லபுதுவ பண்ணைக்குச் சொந்தமான ரூபா 9,077,424 தொகையான காணிகளும் கட்டிடங்களும் ரூபா 445,500,000 இற்கு மதிப்பிடப்பட்டு சொத்துக்களின் பெறுமதி ரூபா 436,422,576 அல்லது 4808 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

- போத்திவெல பண்ணைக்குச் சொந்தமான ரூபா 2,500,000 தொகையான காணிகளின் பெறுமதி ரூபா 20,000,000 வரை ரூபா 17,500,000 அல்லது 700 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

- தெலிஞ்ஞவில பண்ணைக்குச் சொந்தமான ரூபா 3,567,500 தொகையான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 300,280,952 வரை ரூபா 296,713,452 அல்லது 8317 சதவீதத்தால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் மிகையாகச் செலுத்தப்பட்ட சம்பளங்களுக்காக செம்மையாக்கல்கள் செய்து சம்பளம் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்த போதிலும் 2006 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் 71 உத்தியோகத்தர்களை சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்வதற்கும் அதேபோல் சேவையிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

3. வருமான முகாமைத்துவம்

2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம் தொடர்பான பொழிப்பாக்கப்பட்ட விபரம் கீழே தரப்படுகின்றது.

| வருமான வகை | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011<br>ரூபா<br>மில்லியன் | 2012<br>ரூபா<br>மில்லியன் | 2013<br>ரூபா<br>மில்லியன் | 2014<br>ரூபா<br>மில்லியன் | 2015<br>ரூபா<br>மில்லியன் |
| வரி வருமானம் | 3,705 | 3,890 | 4,039 | 4,864 | 5,654 |
| வரியல்லா வருமானம் | 570 | 619 | 717 | 546 | 650 |
| மொத்தம் | 4,275 | 4,509 | 4,756 | 5,410 | 6,304 |

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை முத்திரைக் கட்டணம், மருந்துகள் மற்றும் இரசாயன வரி, பெற்றோலிய வரி, புரள்வு வரி வருமானம் என்பன தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றது.

| வருமான விபரம் | 2015.01.01 இல் உள்ளவாறான மீதி | ஆண்டிற்கான மதிப்பீடு | ஆண்டின் போது அறவீடு | ஆண்டின் போது விடுவித்தல்கள் | 2015.12.31 இல் உள்ளவாறான மீதி | அறவீட்டின் சதவீதம் | விடுவித்தல்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | |
| முத்திரைக் கட்டணம் | 500,009,779 | 673,076,785 | 110,502,556 | 405,480,297 | 657,103,711 | 9.42 | 34.56 |
| மருந்து மற்றும் இரசாயன வரி | 1,780,940 | 1,383,046 | 669,365 | 282,750 | 2,211,871 | 21.15 | 8.93 |
| எரிபொருள் வரி | 11,785,475 | 4,086,560 | 4,973,774 | 980,593 | 9,917,668 | 31.33 | 6.17 |
| புரள்வு வரி | 55,364,524 | - | 2,101,716 | 6,029,911 | 47,232,897 | 3.79 | 10.89 |
| மொத்தம் | 568,940,718 | 678,546,391 | 118,247,411 | 412,773,551 | 716,466,147 | 9.47 | 3.30 |

இது தொடர்பாக பின்வருபவை அவதானிக்கப்பட்டன.

(i) மேலே தரப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றம் திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை என்பது மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான ரூபா 568,940,718 தொகையான நிலுவை வருமானம் ஆண்டின் இறுதியில் ரூபா 716,466,147 வரை அதிகரித்திருந்தமையினை உறுதிப்படுத்துகின்றது.

(ii) இரண்டு வருமான விடயங்கள் தொடர்பாக ஆண்டின் போது அறவிடப்பட்ட வரிச் சதவீதத்தை விட அதிக சதவீதத்தில் வரி விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெந்தோட்டை ஜனகலா நிலைய வளவில் குத்தகை செலுத்திய 03 கட்டிடங்களுக்காக அறவிட வேண்டிய நிலுவை குத்தகைப் பணங்களின் கூட்டு மொத்தம் ரூபா 286,200 ஆக இருந்ததுடன் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குத்தகை அறவீடு செய்தல்

-----------------------------------------------

(i) அரசாங்கத்தின் காணிகளை நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்காக காலி மாவட்டத்திலுள்ள 06 பிரதேச செயலகங்களுக்குரிய குத்தகைதாரர்கள் 22 பேரிடமிருந்தும் தங்கல்ல, திஸ்ஸமகாராம ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களுக்குரிய 13 குத்தகைதாரர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 2,487,257 மற்றும் ரூபா 7,566,776 தொகைகளான நீண்டகால குத்தகைகளும் தண்டப்பணங்களும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் காலி மாவட்டத்திலுள்ள 03 பிரதேச செயலகங்கள் 466 வருடாந்த உத்தரவுப் பத்திரதாரர்களிடமிருந்து ரூபா 905,831 தொகையான நிலுவைக் குத்தகையும் தண்டப்பணமும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) கலால் வரி உத்தரவுப் பத்திரம் வழங்குதல்

---------------------------------------------------------------------------

காலி மாவட்டத்தில் 05 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய 27 உத்தரவுப் பத்திரதாரர்களுக்கும் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தினால் 02 நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட 41 கலால் வரி உத்தரவுப் பத்திரதாரர்கள் தொடர்பாக அறவிடவேண்டியிருந்த முறையே ரூபா 12,136,250 மற்றும் ரூபா 253,334 கூட்டு மொத்தமான திருத்திய உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் மற்றும் தாமதக் கட்டணங்களையும் மீளாய்வாண்டிற்கான உத்தரவுப் பத்திரக் கட்டணங்களையும் செலுத்தாமல் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

(உ) (i) 1994 இன் 02 ஆம் இலக்க மாகாண சபையின் நிதி (குறை நிரப்பு ஒழுங்கு விதி) நியதிச்சட்டத்தின் V ஆவது அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் மூலம் அளத்தல் மற்றும் நிறுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் வருமான ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டுமெனத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) அளத்தல் மற்றும் நிறுத்தல் கட்டளைச் சட்டத்திற்குப் பதிலாக 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டுப் பிரிவு நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச் சட்டம் என்ற பெயரில் ஒரு அதிகாரச்சட்டம் இலங்கை பாராளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும், அதற்கு இணங்கிய வகையில் மேற்கூறிய நியதிச்சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இவ்விடயத்திற்காக தனியான ஒரு நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமையில் உரிய அதிகாரச் சட்டத்தின் கீழ் அறவீடு செய்யவிருந்த வருமானம் மாகாண சபையினால் இழக்கப்பட்டிருந்தது.

(iii) மேற்கூறிய நியதிச்சட்டத்தின் 1 ஆவது அத்தியாயத்தின் 2.2(ஆ) மற்றும் 5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பரிசுப் போட்டி வரி சம்பந்தமாக மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரை கேட்டறிந்து அமைச்சரினால் கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை அக்கட்டளை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நியதிச்சட்டத்தின் மூலம் கீழே தரப்பட்டுள்ள கட்டளைச் சட்டங்களின் கீழ் அறவிடப்படுகின்ற வரி, உத்தரவுப் பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் மாகாண சபைக்கு கிடைக்க வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் இடம்பெறுகின்ற அறவீடுகளை முறைப்படியாக அறவீடு செய்வதற்காக தனித்தனியாக நியதிச்சட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமையில் மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய குறிப்பிடத்தக்க அளவு வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

- காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டம்.
- மருத்துவ கட்டளைச்சட்டம்.
- வன மிருகங்கள் மற்றும் தாவரங்களைப் பாதுகாத்தல் கட்டளைச் சட்டம்.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் நீண்டகால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்காக தென் மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தால் 2,170 காணித் துண்டுகள் இனங்காணப்பட்டிருந்தன.

(i) பிரதேச செயலாளர் அலுவலகங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் குறைபாடுகள் காரணமாக 957 கோவைகளும்,

(ii) விண்ணப்பதாரிகள் சம்பந்தமாக பிரதேச செயலகங்களின் இணக்கப்பாடுகள் இல்லாமையின் காரணமாக 392 கோவைகளும்,

(iii) காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெறாமையின் காரணமாக 575 காணிகள் சம்பந்தமாகவும் நீண்டகால குத்தகைகளை அறவீடு செய்யமுடியாதிருந்தது.

(iv) இத்தகவல்களின் பிரகாரம் இனங்காணப்பட்ட காணிகளிலிருந்து உரியவாறு குத்தகைகளை அறவீடு செய்யக்கூடியதாவிருந்த காணிகளின் அளவு 11.33 சதவீதம் என்ற குறைந்த சதவீதமாக இருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் விளைச்சல் குத்தகை அறவீடு செய்வதற்காக இனங்காணப்பட்டிருந்த 1,115 காணிகளில் 65 காணிகளிலிருந்தும் வருடாந்த குத்தகை அறவீடு செய்வதற்காக இனங்காணப்பட்ட 12,556 காணிகளில் 1,300 காணிகளிலிருந்தும் குத்தகை அறவிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் கொள்வனவு விலைகளை அறவீடு செய்வதற்காக இனங்காணப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை 501 ஆக இருந்ததுடன் அவற்றில் 341 காணித் துண்டுகளிலிருந்து கொள்வனவு விலை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமையில் குறிப்பிடத்தக்க அளவான வருமானத்தை சேகரிப்பதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ஐ) தென் மாகாண சபையின் 2013 இன் 01 ஆம் இலக்க நகை அடகுபிடிப்பாளர்களின் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தரவுப் பத்திரக் கட்டணம், நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தலின் மூலம் காலத்திற்கு காலம் மாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் இதற்கு இணங்க சட்டரீதியான அடிப்படை ஒன்று இல்லாது கட்டணம் அறவீடு செய்வதன் மூலம் சிக்கல்கள் உருவாகலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

4. நிதி மீளாய்வு
------------------------

4.1 நிதி விளைவுகள்
-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 21,934,172,245 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 17,104,601,590 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,829,570,655 தொகையான வீழ்ச்சி சுட்டிக்காட்டப்படுகின்றது.

4.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு
------------------------------------------------------------------

4.2.1 நிதி செயலாற்றல் கூற்று
-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் நிதி செயலாற்றல் தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் சில கீழே தரப்படுகின்றன.

(i) மொத்த வருமானத்திற்கான பற்றாக்குறை
---------------------------------------------------------------------

முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் மொத்த வருமானத்திற்கும் மொத்த பற்றாக்குறைக்குமிடையேயான விகிதம் அதிகரித்த போக்கினைச் சுட்டிக்காட்டியதுடன் மீளாய்வாண்டில் அந்த விகிதம் முன்னைய ஆண்டை விட 32 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) மொத்த வருமானத்திற்கும் மொத்த செலவிற்குமிடையிலான விகிதம்
------------------------------------------------------------------------------------------------------------

முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் மொத்த வருமானத்திற்கும் மொத்த செலவிற்குமிடையிலான விகிதத்தில் அதிகரிப்பைக் காட்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த விகிதம் முன்னைய ஆண்டை விட 32 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே மொத்த வருமானத்திற்கு எதிராக மொத்த செலவானது அண்ணளவாக ஐந்து மடங்கால் அதிகரித்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மொத்த வருமானத்தில் ரூபா 894,016,813 அதிகரிப்பைச் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டில் ரூபா 2,042,951,279 தொகையான 03 வருமான விடயங்களின் வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,918,704,308 வரை அதாவது ரூபா 124,246,971 ஆல் குறைவடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவுகள் ரூபா 5,478,863,427 ஆல் அதிகரித்திருந்ததுடன் அதற்கு பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்தன.

(i) மீளாய்வாண்டில் ஆளணி வேதனச் செலவு ரூபா 20,394,361,473 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் இச்செலவு ரூபா 15,826,778,890 ஆக இருந்தது. அதற்கிணங்க அச்செலவு ரூபா 4,567,582,583 ஆல் அல்லது 28.86 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டில் ஏனைய வழங்கல் மற்றும் சேவைச் செலவுகள் ரூபா 1,636,994,677 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அச்செலவு ரூபா 1,536,171,921 ஆக இருந்தது. அதற்கிணங்க அச்செலவு ரூபா 100,822,756 ஆல் அல்லது 6.56 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) மீளாய்வாண்டில் மானியங்கள் மற்றும் மாற்றல்களின் கீழ் செலவுகள் ரூபா 3,512,009,327 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அச்செலவுகள் ரூபா 2,708,146,987 ஆக இருந்ததனால் அச்செலவுகள் ரூபா 803,862,340 ஆல் அல்லது 29.68 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான வருமான பற்றாக்குறை ரூபா 19,321,513,838 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அப்பெறுமதி ரூபா 14,736,667,223 ஆக இருந்ததனால் பற்றாக்குறை ரூபா 4,584,846,615 ஆல் அல்லது 31.11 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான அரசாங்க முதலீடு ரூபா 2,612,658,407 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அப்பெறுமதி ரூபா 2,367,934,367 ஆக இருந்ததனால் ரூபா 244,724,040 ஆல் அல்லது 10.33 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்த பாதீட்டு பற்றாக்குறை ரூபா 21,934,172,245 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அப்பெறுமதி ரூபா 17,104,601,590 ஆக இருந்ததனால் பற்றாக்குறை ரூபா 4,829,570,655 ஆல் அல்லது 28.23 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 5. அதிகாரசபைக் கணக்குகள் / நிதியக் கணக்குகள் மற்றும் வணிக முற்பணக் கணக்குகள்

### 5.1 அதிகாரசபைக் கணக்குகள்/ நிதியக் கணக்குள்

தென் மாகாண சபையில் நியதிச்சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 05 அதிகாரசபைகளும் 07 நிதியங்களும் காணப்படுவதுடன் அவற்றின் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காகச் சமர்ப்பித்தல் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

(அ) ஒரு அதிகாரசபைக்கும் 4 நிதியங்களுக்குமான நிதிக்கூற்றுக்கள் மாத்திரம் 2016 மார்ச் 31 ஆந் திகதியில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 3 அதிகாரசபைகளுக்கும் ஒரு நிதியத்திற்குமான நிதிக்கூற்றுக்கள் 3 மாதங்களை அண்மித்த கால தாமதத்துடனும் ஒரு அதிகாரசபைக்குரிய நிதிக்கூற்றுக்கள் 4 மாத காலதாமத்துடனும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தினால் 2006 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1996 இன் 01 ஆம் இலக்க தென் மாகாண கிராமிய அபிவிருத்தி நியதிச்சட்டத்தின் 15(iii) ஆம் பந்தியில் மற்றும் 18 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு கிராமிய அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 வணிக முற்பணக் கணக்குகள்

தென் மாகாண சபைக்குச் சொந்தமான நிறுவனங்களுக்குள் 11 வணிக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் காணப்படுவதுடன் அவற்றின் நிதி விளைவுகள் கீழே தரப்பட்டவாறு இருந்தன.

(அ) மீளாய்வாண்டின் போது உத்தேச கட்டணங்களைச் செம்மையாக்குவதற்கு முன்னர் இலாபத்துடன் 10 முற்பணக் கணக்குகள் பேணப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அந்த எண்ணிக்கை 08 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் உத்தேசக் கட்டணங்களைச் செம்மையாக்கியதன் பின்னர் இலாபம் அடைந்திருந்த முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை 03 ஆக இருந்ததுடன் இரண்டு ஆண்டுகளின் போதும் உத்தேச கட்டணங்களைச் செம்மையாக்கியதன் பின்னர் நட்டத்தைக் காட்டிய முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை 07 ஆகும்.

(இ) 31502 ஆம் விடய இலக்க சான்றுபடுத்திய விதை மற்றும் விவசாயப் பொருள் முற்பணக் கணக்குகளுக்குரிய முன்னைய ஆண்டின் போது உத்தேசக் கட்டணங்கள் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. 32049 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகளுக்குரிய மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6. செயற்பாட்டு மீளாய்வு

6.1 செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டிற்கான மூலதன முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பான பொழிப்பாக்கிய விபரம் கீழே தரப்படுகின்றது.

| | நிதி மூலம் | உத்தேச செயற்திட்டங்களின் எண்ணிக்கை | முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டவை | 50 சதவீதத்தை மிகைத்தவை | 50 சதவீதத்திற்கு குறைவானவை | ஆரம்பிக்கப்படாதவை |
|---|---|---|---|---|---|---|
| இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம் | 1,010 | 674 | 82 | 153 | 101 |
| | பருமனளவு அடிப்படையிலான மானியம் | 370 | 234 | 30 | 65 | 41 |
| | பருமனளவு அடிப்படையிலான மானியம் - உறுப்பினர் நிதி ஏற்பாடு | 2,655 | 1,880 | 246 | 245 | 284 |
| | | 4,035 | 2,788 | 358 | 463 | 426 |

(i) 426 உத்தேச செயற்திட்டங்களின் வேலைகள் ஆண்டின் இறுதிவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆரம்பிக்கப்பட்ட 463 செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

(iii) 4,035 உத்தேச செயற்திட்டங்களில் பூர்த்திசெய்யப்பட்ட அளவு 2,788 ஆக இருந்ததுடன் அவை 69 சதவீத பெறுமதியைக் கொண்டிருந்தன.

(ஆ) பரீட்சைப் பெறுபேறுகள்

கல்வித் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 13,438,495,788 கூட்டுத் தொகையான செலவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் அச்செலவுகள் ரூபா 10,559,429,572 ஆக இருந்தது. மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் திணைக்களத்தால் அடைந்து கொள்ளப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான பொழிப்பாக்கிய விபரம் (மாகாணத்தில் அமைந்துள்ள 66 தேசிய பாடசாலைகளின் விபரமும் உள்ளடக்கப்பட்டு) கீழே தரப்படுகின்றன.

(i) 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான பொழிப்பாக்கிய விபரம் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | தோற்றியவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை | சதவீதம் | சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை | 70 புள்ளிகளுக்கு கூடுதலாகப் பெற்றவர்களின் எண்ணிக்கை | 70 புள்ளிகளுக்கு குறைவாகப் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 2015 | 41,638 | 4,337 | 10.4 | 37,301 | 33,960 | 3,341 |
| 2014 | 40,913 | 7,042 | 17.2 | 33,871 | 29,039 | 4,832 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டைவிட கூடுதலாக 725 பரீட்சாத்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்த போதிலும் சித்தியடைந்தோர்களின் எண்ணிக்கை 2,705 ஆல் குறைவடைந்திருந்தது.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது சித்தியடையாதோர்களின் எண்ணிக்கை 3,430 ஆல் அதிகரித்திருந்ததாகவும் 70 புள்ளிகளை விடக் குறைவாக பெற்றோர்களின் எண்ணிக்கை 1,491 ஆல் குறைவடைந்தும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (சாதாரண தர) பரீட்சை

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான க.பொ.த (சாதாரண தர) பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான பொழிப்பாக்கிய விபரம் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | தோற்றியோர் எண்ணிக்கை | உயர் தரத்திற்காக தகைமை பெற்றோர்களின் எண்ணிக்கை | சதவீதம் | அனைத்து பாடங்களுக்குமாக "A" சித்தி பெற்றோர்களின் எண்ணிக்கை | அனைத்து பாடங்களிலும் சித்தியடையா தோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 2015 | 34,801 | 26,173 | 75.2 | 730 | 722 |
| 2014 | 33,145 | 24,223 | 73.1 | 594 | 793 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது சாதாரண தர பெறுபேறுகளில் முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கையில் 722 பேர் அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்திருக்கவில்லை.

(iii) கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சை

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான (உ.த) பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான பொழிப்பாக்கிய விபரம் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | தோற்றியோர் எண்ணிக்கை | பல்கலைக்கழக நுழைவுக்காக தகைமையை பெற்றோர் எண்ணிக்கை | சதவீதம் | அனைத்து பாடங்களிலும் சித்தியடையாதோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2015 | 28,512 | 17,276 | 60.5 | 2,779 |
| 2014 | 29,506 | 18,345 | 62.1 | 3,224 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பரீட்சைக்குத் தோற்றியோர்களின் எண்ணிக்கை 994 ஆல் குறைவடைந்திருந்தது.

- பல்கலைக்கழக நுழைவுக்காக தகைமைகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது 1,069 ஆல் குறைவடைந்திருந்தது.

- பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 2,779 பேர் அனைத்து பாடங்களிலும் சித்தியடையாதிருந்ததுடன் முன்னைய ஆண்டில் அந்த எண்ணிக்கை 3,224 ஆக இருந்தது.

6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மக்கள் வங்கியில் பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட மிகைப் பணத்தை குறுங்கால சேமிப்புக்களில் முதலீடு செய்வதன் மூலம் உழைக்கப்பட்டிருந்த வட்டியை அதே வங்கியின் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கின் மீதி ரூபா 87,395,876 ஆக இருந்ததுடன் தென்

மாகாண சபையின் செயற்பணிகளுக்காக பயன்படுத்தாமையின் நோக்கம் கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை.

(ஆ) பல ஆண்டுகளாக பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியக் கணக்கில் முன்கொண்டு வந்த மீதி ரூபா 1,944,009 ஆக இருந்த போதிலும் அதற்குரிய நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்து முதலீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுமானத் தேய்வு ஆழ்நிதிக் கணக்கிலுள்ள ரூபா 60,243,372 தொகையான மீதிகளில் ரூபா 5,489,479 மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) தென் மாகாண சபையின் பதவியணியினரின் பயிற்சித் தேவைப்பாட்டை முறையாக இனங்கண்டு அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கு ஏற்பாடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 31,000,000 நிதி ஏற்பாட்டில் ரூபா 22,466,949 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(உ) வருமானத்தை சேகரித்தல் கணக்குகளிலிருந்து தென் மாகாண சபை நிதியத்திற்கு நாளாந்தம் பணம் செலவு வைக்கப்படுகின்ற முறைமையில் நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படாமையின் காரணமாக சேகரிப்புக்கள் தொடர்பான வங்கி நடைமுறைக் கணக்கில் தேவையற்ற வகையில் காசு மீதி சேகரிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மாகாண சபைக்கு மேலதிக வருமானத்தை உழைப்பதற்கு இருந்த சந்தர்ப்பம் இதன் மூலம் இழக்கப்பட்டுள்ளதாகவும் இது நிதிக் கட்டுப்பாட்டில் சாதகமான நிலைமை அல்ல என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2001 சனவரி 15 ஆந் திகதிய 01/2001 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்பு பணம் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய மீளாய்வாண்டிற்கான இறுதி 04 மாதங்களுக்காக ரூபா 15,781,883 மொத்த தொகையான பங்களிப்பு பணம் அத்திணைக்களத்திற்கு அனுப்புதல் 2016 சனவரி மாதம் வரை தாமதமடைந்திருந்தது.

(எ) தென் மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகன விபத்துக்கள் சம்பந்தமாக 74 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 10,292,861 தொகையான நட்டங்களும் 119 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 37,326,417 தொகையான ஆதன நட்டங்களும் பல வருடங்களாக தீர்த்துவைக்கப்படாது காணப்பட்ட போதிலும் இவ்வாகனங்கள் மற்றும் ஆதன நட்டங்களை தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளைச் சமர்ப்பித்து காட்டப்படாதிருந்த 12 வாகன விபத்துக்களையும் 5 ஆதன நட்டங்களையும் உள்ளடக்கி 17 சந்தர்ப்பங்களுக்குரிய நட்டங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 52,534,686 ஆக இருந்ததுடன் மேலும் 3 வாகன விபத்துக்களும் 2 ஆதன நட்டங்களையும் உள்ளடக்கிய 05 சந்தர்ப்பங்களுக்குரிய நட்டங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி முதிர்ச்சியடைகின்றதும் ஆண்டிற்கு 6 சதவீத வட்டியின் கீழ் சுயமாக புதுப்பிக்கப்படுகின்ற ரூபா 41,236,000 தொகையான நிலையான வைப்புக்கள் முதிர்ச்சியடைவதற்கு முன்னர் பணமாக மாற்றியதன் காரணமாக உழைக்கக் கூடியதாகவிருந்த ரூபா 135,570 தொகையான வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஒ) (i) தென் மாகாண கல்வித் திணைக்களத்திலும் அதன் கீழுள்ள நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது மரணமடைந்த ஊழியர்களின் குறைந்த வயதையுடைய பிள்ளைகளுக்காக 1966 ஆம் ஆண்டிலிருந்து 1992 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் சேமிப்பு வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட 102 குறைந்த வயதையுடையவர்களுக்கான கணக்குகளுக்குரிய வைப்புச் சான்றிதழ் வைப்பாளர்களின் வயது பூர்த்தியடைந்து குறிப்பிடத்தக்க அளவு கடந்திருந்தும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஜூன் மாதம் 10 ஆந் திகதி வரை 85 வைப்புச் சான்றிதழ்களை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அத்திகதியில் உள்ளவாறு அவற்றில் 06 கணக்குகளுக்குரிய மீதிகளின் மொத்த தொகை ரூபா 332,278 ஆகும். 79 சேமிப்புக் கணக்குகளுக்குரிய மீதிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் அக்கணக்குகளின் ஆரம்ப வைப்பு மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 52,591 ஆக இருந்தது.

(ஓ) ஒரு தச்சுத் தொழிலாளர் மாத்திரம் சேவையாற்றுகின்ற மற்றும் குறைந்த அளவான சேவைகள் மேற்கொள்ளப்படுகின்ற போத்தல தச்சு சேவை நிலையத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 500,000 தொகையான தச்சு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2016 ஜூலை 05 ஆந் திகதி வரை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. ரூபா 260,000 பெறுமதியான 02 தச்சு வேலை இயந்திரங்கள் கொண்டுவரப்படாது வழங்குனரிடமே வைத்திருக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஔ) கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு ஓய்வூதிய முறைமையை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்துவதற்காக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 877,777 செலவு செய்யப்பட்டிருந்தும் 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை அந்நிகழ்ச்சித்திட்டங்களின் தொடக்க தெளிவுபடுத்தல் கூட்டத்தொடருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்ற செலவாக மாறியிருந்தது.

6.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை
-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் வரி வருமானத்தை சேகரிப்பதற்கு நேரடியாகத் தொடர்புபட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உள்ளபடியான பதவியணியினரானது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை 127 சதவீதத்தாலும் ஒட்டுமொத்த செலவுகளானது 78 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தும் வருமானச் சேகரிப்பானது 20 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) அரசாங்க காணிகளில் குத்தகை அறவிடுதல் சம்பந்தமாக பிரதேச செயலகங்கள் மட்டத்தில் முறையான மேற்பார்வை இடம்பெறுவதில்லை என்பதனை காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய 03 மாவட்டங்களில் முறையே 07, 06 மற்றும் 07 பிரதேச செயலகங்களினால் சேகரிக்கப்படாத வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 29,429,750 ஆக இருந்தமை உறுதிப்படுத்துகின்றது. அப்பெறுமதியானது எதிர்பார்த்த வருமானத்தில் 66 சதவீதமாக இருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரையான 03 ஆண்டு காலத்தில் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அளவீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய 240 காணிகளில் 132 காணிகளுக்கான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. சதவீதமாக அப்பெறுமதி 55 சதவீத அளவாகும்.

(ஈ) கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் 10 ருகுனு ரன்சலு கடைகளுக்காக ரூபா 1,775,000 செலவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த POS கணனி முறைமைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடைந்துகொள்ளப்படவில்லை என்பதுவும் தெரிவுசெய்யப்பட்ட விற்பனைக் நடவடிக்கைகளுக்காக மாத்திரம் இந்த POS கணனி முறைமை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பதுவும் வெளிப்படுத்தப்பட்டது.

(உ) மாகாண வருமானத் திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 3,491,480 தொகையான 09 கொள்வனவுகள் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் இடம்பெற்றிருந்தது. ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள மீண்டுவரும் நிதி ஏற்பாடு நிதி விதி 30 இன் மூலம் மாற்றம் செய்யப்பட்டு இக்கொள்வனவுகள் இடம்பெற்றதாக மாகாண வருமான ஆணையாளரினால் 2016 ஏப்ரல் 20 ஆந் திகதி கணக்காய்விற்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

6.4 சச்சரவுத்தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இயந்திரப் பொறியியலாளர் உத்தியோகபூர்வ நடவடிக்கைக்காக 2015 ஜுன் 30 ஆந் திகதி சென்ற வாகனம் 2015 ஜுலை 01 ஆந் திகதியான அரசாங்க விடுமுறை தினத்தில் தனிப்பட்ட நபர் ஒருவருடன் பிரயாணம் செய்த போது விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்து நடைபெற்ற இடத்தில் வாகனம் காணப்பட்ட போதிலும் பொறியியலாளர் அந்த இடத்திலிருந்து வெளியேறிச் சென்றிருந்தார். இது தொடர்பான விசாரணை 2016 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) (i) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான ஒரு வாகனம் 2014 திசெம்பர் 02 ஆந் திகதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தருக்கு விடுவிக்கப்பட்டு 2015 மே 12 ஆந் திகதி மீண்டும் பொறுப்பேற்கப்பட்டு ரூபா 95,708 செலவு செய்து திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் 2015 ஜுலை 24 ஆந் திகதி மீண்டும் அந்த உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) எவ்வாறாயினும் அந்த வாகனம் கம்புறுபிட்டி பிரதேச சபையின் உப தலைவருக்கு ஒப்படைக்கப்பட்டது என இயந்திரப் பொறியியலாளரினால் பொது முகாமையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட தெமா/வீஅஅஇபொ /வாகனம் இலக்க 2015 ஏப்ரல் 28 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மாத்தறை உதவி காணி ஆணையாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 51-0674 ஆம் இலக்க கெப் வாகனத்தை திருத்தம் செய்வதற்காக ஒரு கராஜிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அனுப்பிவைக்கப்பட்ட திகதியை உறுதியாக இனங்காண முடியாதிருந்ததுடன் திருத்தம் செய்தமைக்காக 2010 ஏப்ரல் 10 ஆந் திகதி ரூபா 88,899 தொகையான விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 பெப்ரவரி 01 ஆந் திகதிவரை இந்த வாகனம் கராஜின் உரிமையாளருக்குச் சொந்தமான தனிப்பட்ட காணியில் துருப்பிடித்தவாறு காணப்பட்டது. அவ்வாறே இதன் பல உதிரிப்பாகங்கள் அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் வருடாந்த வாகனக் கணிப்பிற்கு இந்த வாகனம் தொடர்பான தகவல் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, வேண்டுமென்றே அரசாங்கத்தின் வளங்கள் அழிவுறுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் புதிதாக சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 42 காவலாளிகளுக்கு உரிய சம்பள அளவுத்திட்டத்திலுள்ள தொடக்க சம்பள படிநிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் செலுத்தப்படாது 12 ஆவது படிநிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டதன் காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,155,293 தொகை சம்பளமும் படிகளுமாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) காலி மாவட்டத்திலுள்ள 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள 19 அரசாங்க காணிகளில் 06 தனிப்பட்ட தொலைபேசிக் கம்பனிகளால் 19 தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டு பரிமாற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உரிய குத்தகைப் பணம் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதம செயலாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான ஒரு உத்தியோகபூர்வ வாகனத்திற்காக மீளாய்வாண்டின் சனவரி மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரை பயணம் செய்யாத 3640 கிலோமீற்றர்களுக்காக ரூபா 53,235 பெறுமதியான 455 லீற்றர் எரிபொருள் மிகையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) 2011 ஆம் ஆண்டின் போது மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு 55 மடிக் கணனிகளை வழங்குவதற்காக ரூபா 7,920,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அக்கணனிகளை அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டமைக்கு அல்லது பொறுப்பேற்றமைக்கு அல்லது அவர்களால் மீண்டும் கையளிக்கப்பட்டமைக்கு எதுவித எழுத்துமூல சான்றுகளும் காணப்படவில்லை. இவ்வாறு இருக்கையில் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 8,132,350 செலவு செய்து மீண்டும் மடிக் கணனிகளும் டெப் இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டு மாகாண அமைச்சர்கள் உட்பட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஏ) (i) ருகுணு சுற்றுலாப் பணியகத்தின் ஊழியரல்லாத தலைவருக்காக 2014 மே மாதத்திலிருந்து 2016 ஆகஸ்ட் மாதம் வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ரூபா 189,000 பங்களிப்பு பணம் பணியகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் ஊழியரல்லாத ஐந்து தலைவர்களுக்காக 1994 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ரூபா 1,032,960 தொகையான பங்களிப்பு பணம் அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான முகப்பெறுமதி ரூபா 159,313,647 தொகையான 78 நிலையான வைப்புச் சான்றிதழ்கள் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைத்திருக்கப்படாததால் இந்நிலையான வைப்புச் சான்றிதழ்களுக்கு மேலதிகமாக இன்னும் நிலையான வைப்புச் சான்றிதழ்கள் இருந்தனவா என்பது தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஒ) (i) தென் மாகாண சபையின் 1992 இன் 02 ஆம் இலக்க நிதி (திருத்திய) நியதிச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1990 இன் 07 ஆம் இலக்க தென் மாகாண சபையின் நிதி நியதிச் சட்டத்தின் 104(அ)(1) ஆம் பிரிவில் மாகாண ஊக்குவிப்பு நிதியம் என்ற நிதியம் தோற்றுவிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே 104(4)(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்நிதியத்திற்கு 1991 ஆம் ஆண்டின் போது குறைநிரப்பு உதவிப் பணமாக மாகாண சபையில் முன்வைக்கப்பட்ட பணம் மற்றும் அதன் பின்னர் மாகாண சபையினால் வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற பணம் என்பன செலவு வைக்கப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்தது.

(ii) மாகாண சபையினால் மீளாய்வாண்டு வரை மாகாண ஊக்குவிப்பு நிதியம் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் முறையான அங்கீகாரம் இல்லாது தென் மாகாண வருமானத் திணைக்களத்தினால் ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டு வந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 16,763,488 தொகை ஊக்குவிப்பு படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஓ) தெனியாய சுற்றுலா தகவல் நிலைய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 4,842,413 செலவு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாதிருந்த போதிலும் அச்செலவின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் 5 சதவீதப்படி பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்பட்டிருந்தும் அக்காணியின் உரிமையை மாற்றிக் கொள்வதற்கு 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.5 வெளிப்படையான மோசடிகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியிலுள்ள மூன்று உத்தியோகத்தர்கள் 2015 ஆம் ஆண்டின் போது 6586 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 632,698 படிகள் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் சனாதிபதியின் செயலாளரின் C.S.A/1/40 ஆம் இலக்க 2008 ஏப்ரல் 23 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கு முரணாக எரிபொருள் கட்டளையின் மூலமும் 4594 லீற்றர் எரிபொருட்களும் அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) போலியான கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து நியமனங்களைப் பெற்றுக்கொண்டிருந்த அம்பலாங்கொடை வலயத்திலுள்ள இரண்டு ஆசிரியர்கள் ஒழுக்காற்று விசாரணைகளின் மூலம் குற்றவாளிகளாக உறுதிப் படுத்தப்பட்டிருந்தும் ஒரு ஆசிரியர் மாத்திரம் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு மற்றைய ஆசிரியர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். அதற்கிணங்க ஒரே குற்றத்திற்காக இரண்டு வகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் போலியான சான்றிதழ்கள் சமர்ப்பித்தல்கள் சம்பந்தமாக இரண்டு ஆசிரியர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) (i) போலியான சான்றிதழ்களைச் (போலி ஆவணம்) சமர்ப்பித்து அதிபர் சேவைக்கு, ஆசிரியர் சேவைக்கு மற்றும் ஏனைய சேவைகளுக்கு நியமனங்களைப் பெற்று தென் மாகாண சபையில் சேவையாற்றுகின்ற 76 நபர்கள் இருப்பதாக மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டிருந்தது.

(ii) நடைபெற்று வருகின்ற ஒழுக்காற்று விசாரணைகளின் பிரகாரம் 05 நபர்கள் அக்குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 12 நபர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. 59 நபர்களுக்குரிய ஒழுக்காற்று விசாரணை பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் அவர்களில் 39 நபர்களுக்கு மீளாய்வாண்டின் போது சம்பளங்களும் படிகளுமாக ரூபா 16,290,518 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) (i) 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதி ரூபா 7,076,250 பெறுமதிக்கு தென் மாகாண வருமானத் திணைக்களத்தினால் அபிப்பிராயச் சான்றிதழ் வழங்கப்பட்ட காணி அதற்கு 8 நாட்களுக்குப் பின்னர் அதாவது 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி ஒரே சட்டத்தரணியினால் ஒன்றுவிட்ட இலக்கத்துடன் இரண்டு மாற்றுதல் உறுதியின் மூலம் ரூபா 600,000 இற்கும் ரூபா 7,076,250 இற்கும் கைமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

(ii) அபிப்பிராய சான்றிதழிலுள்ள பெறுமதியினை விடக் குறைத்து மாற்றுதல் உறுதியை சான்றுபடுத்தியதன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 259,050 முத்திரை வரி இழக்கப்பட்டிருந்ததுடன் உரிய விலைக்கான மாற்றுதல் உறுதிக்குரிய முத்திரை வரிப் பணம் முறையான அங்கீகாரமின்றி மாகாண வருமான ஆணையாளரினால் விடுவிக்கப்பட்டிருந்தது.

(உ) (i) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் பத்தேகம பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட நான்கு சனசமூக மண்டபங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது நிதி ஒழுங்கீனங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் திருப்தியற்ற வகையில் நிர்மாணிக்கப் பட்டிருந்ததாகவும் அவதானிக்கப்பட்டன. இதில் மிகையாகச் செலுத்தப்பட்ட பணம் மற்றும் உரிய வேலைகளைச் சரிசெய்வதற்காகச் செலவு செய்யப்பட்ட பணத்துடன் ரூபா 1,944,878 தொகையான ஒழுங்கீனங்கள் இடம்பெற்றுள்ளதாக தொழில்சார் தொழில்நுட்பக் குழு அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

(ii) 2009 மே 15 ஆந் திகதிய கணக்காய்வு ஐய வினாவின் மூலம் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் 2009 ஒக்தோபர் 09 ஆந் திகதி தொழில்நுட்ப அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. அறிக்கை வழங்கப்பட்டு 7 ஆண்டுகளை அண்மித்த காலம் கடந்திருந்தும் மாகாண சபை நிதியத்திற்கு இடம்பெற்றுள்ள நட்டத்தை மீள அறவிடுவதற்கும் அதேபோல் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.6 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கீழே விபரிக்கப்பட்ட செலவு விடயங்களுக்கான மொத்த தேறிய நிதி ஏற்பாடும் அவற்றிலிருந்து செய்யப்பட்ட செலவுகளும் எஞ்சியுள்ள நிதி ஏற்பாடும் தொடர்பான பொழிப்பாக்கிய விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு விபரம் | செலவு விடயங்களின் எண்ணிக்கை | தேறிய நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவுகள் | நிதி ஏற்பாட்டில் சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவரும் செலவுகள் | 122 | 132,123,800 | 34,550,146 | 97,573,654 | 73.85 |
| மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்துதலும் | 17 | 140,000,000 | 46,035,286 | 93,964,714 | 67.12 |
| நிலையான சொத்துக்களைச் சுவீகரித்தல் | 7 | 78,127,000 | 7,790,441 | 70,336,559 | 90.03 |
| மூலதன மாற்றங்கள் | 4 | 85,080,000 | 25,862,117 | 59,217,883 | 69.60 |
| மனிதவள அபிவிருத்தி | 1 | 31,000,000 | 8,533,051 | 22,466,949 | 72.47 |
| மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம் | 8 | 2,546,300,000 | 580,429,002 | 1,965,870,998 | 77.21 |
| வரிசை அமைச்சின் மூலம் செய்யப்பட்ட முதலீடு | 1 | 3,107,800 | 978,216 | 2,129,584 | 68.52 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாகாண மீண்டுவரும் செலவுகள்

- 06 செலவினத் தலைப்புக்களுக்குரிய 15 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,035,000 மொத்த தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

- 14 செலவினத் தலைப்புக்களுக்குரிய 107 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 50 சதவீதத்திலிருந்து 99.62 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்துதலும்

- 02 செலவினத் தலைப்புக்களுக்குரிய 02 செலவு விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ரூபா 3,000,000 மொத்த தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

- 06 செலவினத் தலைப்புக்களுக்குரிய 15 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 53 சதவீதத்திலிருந்து 98 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) நிலையான சொத்துக்களைச் சுவீகரித்தல்

- 02 தலைப்புக்களுக்குரிய 02 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 3,227,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

- 320 ஆம் இலக்க செலவுத் தலைப்பில் 05 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 69 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(iv) மூலதன மாற்றல்களுக்காக 03 செலவின தலைப்பின் 04 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 53 சதவீதத்திலிருந்து 92 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(v) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம்

- ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 9,000,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

- 03 செலவினத் தலைப்புக்களுக்குரிய 07 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாடுகளில் 40 சதவீதத்திலிருந்து 93 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(vi) வரிசை அமைச்சின் மூலம் செய்யப்பட்ட முதலீட்டின் கீழ் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 68 சதவீதத்திற்கு அதிகமானவை சேமிக்கப்பட்டிருந்தது.

மேலே இலக்கம் (i) இலிருந்து (vi) வரையான பந்திகளில் காட்டப்பட்ட தகவல்களின் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான நிதிசார் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) தென் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தை உள்ளடக்கி தென் மாகாண சபையின் அனைத்து நிறுவனங்களுக்குமுரிய 192 வங்கி நடைமுறைக் கணக்குகளில் 119 வங்கி நடைமுறைக் கணக்குகளின் பிரகாரம் மாதாந்தம் சராசரியாக ரூபா 462 மில்லியன் அளவான காசு மீதி வங்கிக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டது. இது நிதிசார் முகாமைத்துவங்களில் திருப்தியான நிலைமை அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

6.7 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி… அமைச்சினால் முறையான கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படாது அவசர கொள்வனவாக ஊடகவியலாளர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 927,000 செலவு செய்து 18 டெப் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இரண்டு வருட உத்தரவாத காலத்துடன் இந்த உபகரணங்கள் 2016 ஜூன் 30 ஆந் திகதி வரை எதுவித ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்படாது அமைச்சு களஞ்சியத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) (i) ரூபா 14 மில்லியனை மிகைத்து செலவு செய்து காலி வலயத்திற்குரிய பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட 5200 சதுர அடி அளவான விளையாட்டு மைதானம் 2014 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ii) இரண்டாந்தரக் கல்வியை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் காலி வலயத்திற்குரிய வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமும் 20 கணனிகளும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(இ) பயிற்சி ஆலோசகர் ஒருவர் இல்லாமையால் கிதலகம தச்சுப் பாடசாலை மூடப்பட்டதன் காரணமாக ரூபா 353,493 பெறுமதியான உபகரணம் ரூபா 21,442 பெறுமதியான மூலப் பொருள் மற்றும் ரூபா 51,600 பெறுமதியான முடிவுப் பொருள் இருப்பு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது பயன்படுத்தப்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மாத்தறை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினால் 2015 திசெம்பர் 29 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 660,000 தொகையான 07 பல் மருத்துவ உபகரணங்கள் 2016 ஜூலை 29 ஆந் திகதி வரை நோயாளர் சிகிச்சை சேவைக்காக பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டன.

(உ) தேனுவல சுற்றுலா விடுதியினை நிர்மாணித்தல் மற்றும் அதற்குரிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 14,311,586 தொகையும் பராமரிப்பு, நிர்வாக மற்றும் பாதுகாப்புச் சேவைகளுக்காக ரூபா 1,232,942 தொகையுமாக ரூபா 15,544,078 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சுற்றுலா கைத்தொழிலுக்கு இவற்றிலிருந்து எந்த பங்களிப்பும் கிடைத்திருக்காமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சமுத்திர தொல்பொருள் சுற்றுலா முன்னோடி செயற்திட்டத்தின் கீழ் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், பிரசித்தப்படுத்தல் நடவடிக்கை, ஊழியர் சம்பளங்களைச் செலுத்துதல் ஆகிய நடவடிக்கைகளுக்காக 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 6,335,326 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டின் இறுதிவரை இந்த உபகரணங்கள் எதுவித ஆக்கபூர்வ நடவடிக்கைகளுக்கும்

ஈடுபடுத்தாமையின் காரணமாக அவற்றிலிருந்து எதுவித வருமானத்தையும் உழைக்க முடியாதிருந்ததனால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் கிடைத்திருக்கவில்லை.

(எ) (i) அம்பலாங்கொடை நகரசபைக்குச் சொந்தமான காணியில் சுற்றுலா விடுதியை நிர்மாணிப்பதற்காக ருகுணு சுற்றுலாப் பணியகத்தால் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டுவரை ரூபா 5,098,639 செலவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரை இந்நிர்மாணம் கைவிடப்பட்டிருந்ததனால் மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்றதாக இருந்தது.

(ii) திட்டங்களைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,165,524 செலவின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் 5 சதவீதப்படி நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்விற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) (i) ருகுணு சுற்றுலாப் பணியகத்திற்கு ஒப்படைக்கப்படாத ஒரு காணியில் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 48,301,192 செலவு செய்து ஹிக்கடுவ சுற்றுலா தகவல் நிலையத்திற்காக ஒரு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருந்தது.

(ii) கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட செலவின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் 5 சதவீதப்படி நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்விற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் தசுன கடன் செயற்திட்டத்திற்காக காலி கோட்டையிலுள்ள மக்கள் வங்கியில் பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கு ரூபா 473,418 மீதியுடன் 2 ஆண்டு காலமாக செயற்பாடற்ற நிலையில் பேணப்பட்டு வந்தது.

(ஒ) தென் மாகாண பருமனளவு அடிப்படையிலான அபிவிருத்தி திட்டத்தின் (உறுப்பினர் நிதி ஏற்பாடு) கீழ் 2014 ஆண்டின் போது ரூபா 349,270 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 10 தெளி கருவிகளும் 9x9 அளவிலான 303 மண் வெட்டிகளும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 395,640 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 36 தெளி கருவிகளும் 2016 ஜுலை 29 ஆந் திகதி வரை உரிய செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படாது மாத்தறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஓ) லபுதுவ பண்ணையின் விற்பனை நிலையத்திற்கு ஒரு கேக் கலவை இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி எதுவித பிணை முறிகளும் பெற்றுக்கொள்ளாது ரூபா 123,370 தொகையான 25 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதிப் பணத்திற்காக அத்திகதியே எழுதப்பட்ட ரூபா 370,110 தொகையான காசோலை 47 நாட்கள் நிறுத்திவைக்கப்பட்டதன் பின்னர் வழங்குனர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. உரிய கேக் கலவை இயந்திரமானது 2015 செப்தெம்பர் 10 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும் மூன்று வழி மின் இயலளவு இல்லாமையின் அடிப்படையில் 2016 ஜுலை 21 ஆந் திகதி வரை இயந்திரம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ஔ) விளையாட்டுக்கள், கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் 1997 ஆம் ஆண்டின் போது ரூபா 3,700,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட டொயோட்டா பிராடோ வகையான ஜீப் வண்டி தேவையான பழுதுபார்த்தல் செய்யப்படாமையின் காரணமாக 2014 திசெம்பர் மாதத்திலிருந்து 2016 ஆகஸ்ட் 31 வரை பயன்படுத்தப்படாத நிலையில் நிறுவன வளவில் பாதுகாப்பின்றி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

6.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் தொழில்சார் பயிற்சிகளை வழங்கும் நோக்கில் தோற்றுவிக்கப்பட்டுள்ள 03 கைத்தொழில் பாடசாலைகளால் 2015 ஆம் ஆண்டின் போது ஒரு பயிலுனரையேனும் சேர்த்துக்கொள்ளாதிருந்த போதிலும் அந்நிறுவனத்திற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட ஆலோசகருக்கும் ஏனைய பதவியணியினருக்கும் சம்பளங்களும் படிகளும் செலுத்துவதற்காக ரூபா 3,294,672 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பத்தேகம கால்நடை மருத்துவ அலுவலகத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டி ரூபா 106,680 செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஒக்தோபர் 01 ஆந் திகதிக்குப் பின்னர் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) எல்பிடிய கால்நடை மருத்துவ அலுவலகத்திற்குச் சொந்தமான அரசாங்க இல்லம் 2014 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 1,319,058 செலவு செய்து பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குடியிருப்பதற்காக இல்லம் ஈடுபடுத்தப்படாது மூடிவைக்கப்பட்டிருந்தது.

6.9 இனங்காணப்பட்ட நட்டம்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 நவம்பர் மாதம் விபத்துக்குள்ளாகிய காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான அம்புலன்ஸ் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக இரண்டு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் 07 ஆண்டுகளாக பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாததன் காரணமாக வாகனம் துருப்பிடித்துக் காணப்பட்டது. விபத்தினால் வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 775,699 தொகையான நட்டம் காப்புறுதி உரித்து மூலம் அல்லது உரிய பொறுப்புக்கூறக்கூடிய நபரை நிர்ணயித்து அவரிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) (i) தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் 2003 ஆம் ஆண்டில் தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் பயிற்சி (தனியார்) கம்பனியில் 30,000 பங்குகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனிக்குச் சொந்தமான இரண்டு பஸ்களை விற்று அதில் ரூபா 1,000,000 அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) தற்பொழுது இக்கம்பனி செயற்படாதுள்ளதால் மிகுதியான ரூபா 2,000,000 பணத்தை அறவீடு செய்தல் நிச்சயமற்றதாகக் காணப்பட்டது. 2003 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை இம்முதலீட்டிலிருந்து அதிகாரசபைக்கு எதுவித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.

6.10 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேசிய கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 1.2.1(அ) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் போட்டி விலைகளைக் கோராது 2015 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தப் பெறுமதி ரூபா 91,650,782 தொகையான 75 செயற்திட்டங்களும் 2016 ஜூன் வரை ஒப்பந்தப் பெறுமதி ரூபா

98,930,822 தொகையான 74 செயற்திட்டங்களுமாக ரூபா 02 மில்லியனுக்கு குறைந்த 149 செயற்திட்டங்களும் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 19,677,463 தொகையான ரூபா 02 மில்லியனுக்கு மிகையான 06 செயற்திட்டங்களும் நேரடி ஒப்பந்த முறைமையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சங்கங்களின் மூலம் நிறைவேற்றிக் கொண்டதன் காரணமாக அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த பொருளாதார நலன் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது விசேட செயற்திட்டத்தின் கீழ் தெய்யந்தர வைத்தியசாலையின் சிகிச்சை கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 8,497,820 மதிப்பீட்டின் அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,876,975 பணம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அத்திகதியின் பின்னர் நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) நடமாடும் மேடை ஒன்றைத் தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த மூலப்பொருட்களின் பெறுமதியை மிகைத்து ரூபா 181,695 தொகையானது சூரியவெவ பிரதேச செயலகத்தினால் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) (i) பத்தேகம மாகுருகொடவில் அமைந்துள்ள தென் மாகாண விளையாட்டுக்கள் நிலையம் மற்றும் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2001 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 142,397,350 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 59,960,884 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 40,000,000 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 26,430,235 தொகையானது ஆண்டின் இறுதியில் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. 2016 ஜூன் 30 ஆந் திகதி வரை அவற்றில் ரூபா 22,290,235 தொகை இன்னும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) செயற்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து நிர்மாண நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது விலைப்பட்டியல்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்திருந்தும் அச்செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட செலவுகளிலிருந்து நலன்களை அடைந்து கொள்வதற்கும் முடியாதிருந்தது.

(iii) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 16 ஏக்கர் பரப்பளவுள்ள காணியைச் சுவீகரிப்பதற்காக 2001 ஆம் ஆண்டின் போது பத்தேகம பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 800,000 பணம் 2016 ஆம் ஆண்டு வரை அக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(iv) 2008 ஆம் ஆண்டின் போது அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரினால் காணிக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 31,500,000 மதிப்பீட்டிற்குரிய பணத்தைச் செலுத்தி காணியைச் சுவீகரிக்கும் நடவடிக்கை 2016 ஜூன் 30 ஆந் திகதி வரை தாமதமடைந்து காணப்பட்டது.

(உ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் வெலிகம சார்லிமவுன்ட் கைத்தொழில் பேட்டையில் உள்ளக வீதியை மேம்படுத்தும் வேலையில் கட்டம் இலக்கம் 5 மற்றும் இலக்கம் 6 இன் கீழ் வீதியின் ஒரு பகுதியை புத்துருவாக்கம் செய்யும் போது 100 மில்லி மீற்றர் கல் பயன்படுத்தப்படாதிருந்த போதிலும் பயன்படுத்தப்பட்டதாக சான்றிதழ் வழங்கப்பட்டு ரூபா 409,349 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. வீதியில் 100 மில்லி மீற்றர் கல் பயன்படுத்தப்படாது 37.5 மில்லி மீற்றர் மற்றும் 19 மில்லி மீற்றர் கற்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு தார் இடப்பட்டு நியம தரத்திற்கு மாற்றமாக நிர்மாணிக்கப்பட்டிருந்ததனால் இந்த வீதியின் இரண்டு பகுதிகளை

மேம்படுத்துவதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 1,690,560 தொகையான செலவு விளைவற்றதாகக் காணப்பட்டது.

6.11 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஜூலை 13 ஆந் திகதி பிரதம செயலாளரினால் உலக வங்கி செயற்திட்டத்திற்குரிய 2015 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததனால் 2015 ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட 23 பாடசாலைக் கட்டிட நிர்மாணங்களும், 24 பாடசாலைக் கட்டிடத் திருத்தங்களும் 06 வழங்கல் நடவடிக்கைகளும் பூர்த்திசெய்ய முடியாதிருந்தன. இக்காரணத்தினால் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களில் 77 சதவீதமானவை தொடர்ந்து செய்யவேண்டி ஏற்பட்டது.

(ஆ) மாத்தறை மாவட்டத்தில் சுகாதார நிலைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டிற்காக சுகாதாரத் துறையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,266,300 நிதி ஏற்பாட்டிற்குரிய 07 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மாத்தறை மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தினால் ரூபா 786,433 மதிப்பீட்டின் அடிப்படையில் உடன்படிக்கை செய்யப்பட்ட பொல்கந்தவெல்ல அணைக்கட்டை புனரமைப்புச் செய்யும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பருமனளவு அடிப்படையிலான மானியத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைத்திருந்த ரூபா 23,000,000 பணத்தில் அந்த ஆண்டிற்கான செலவுகள் செய்ததன் பின்னர் எஞ்சிய ரூபா 17,116,595 பணத்தை மாகாண திறைசேரிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படாது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,058,350 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சியுள்ள ரூபா 15,058,245 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதிகாரசபையில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

6.12 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வளங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) அம்பலாங்கொடை கல்வி வலயத்திற்குரிய பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 6 ஆசிரியர்கள் ஏனைய சேவைகளுக்கான சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய பாடசாலைகளின் சம்பளப் பதிவேட்டிலிருந்து சம்பளம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது அந்த ஆறு நபர்களுக்குமாக ரூபா 2,421,518 பணம் சம்பளமும் படிகளுமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) வலஸ்முல்ல வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து ஏனைய நிறுவனங்களில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட நான்கு ஆசிரியர்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 7,054,297 தொகையான சம்பளங்களையும் படிகளையும் அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்ட நிறுவனங்களிலிருந்து மீளப்பெற்றுக்கொள்வதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மாத்தறை வலயத்திலுள்ள கனிஸ்ட வித்தியாலயத்தின் ஒரு ஆசிரியை 2009 ஜூலை 26 ஆந் திகதியிலிருந்து மூன்று (03) மாத காலத்திற்காக சனாதிபதி ஒருங்கிணைப்புச் செயலகத்திற்கு தற்காலிகமாக இணைத்துக்

கொள்ளப்பட்டிருந்ததுடன் 2015 சனவரி 01 ஆந் திகதி மீண்டும் சேவைக்கு சமூகமளித்திருந்தார். அதற்கிணங்க காலம் நீடிக்கப்படாது ஆசிரியை மூன்று ஆண்டுகள் ஐந்து மாத காலம் உரிய பாடசாலைக்கு எதுவித சேவையும் வழங்காது ரூபா 1,774,112 தொகையை சம்பளமும் படிகளுமாகப் பெற்றிருந்தார்.

(ஆ) ருகுணு சுற்றுலாப் பணியகத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,425,660 தொகையான கொக்கல பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு காணியின் உரிமை அதிகாரசபைக்குச் சொந்தமானது என்பதனை உறுதிப்படுத்தும் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 36,826,881 செலவில் இக்காணியில் ஒரு ஹோட்டல் பாடசாலை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்கட்டிடங்களில் இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தினால் ஹோட்டல் பாடசாலை பேணப்பட்டு வந்த போதிலும் பணியகத்திற்கு அதிலிருந்து எதுவித வருமானமும் கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், மேற்கொள்ளப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டிலிருந்து 5 சதவீதப்படி நிதிக்கூற்றுக்களில் வருடாந்தம் பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பெந்தோட்டை ரெஸ்டுரன்ட் நிறுவனம் அமைந்துள்ள காணியின் உரிமை ருகுணு சுற்றுலாப் பணியகத்திற்கு ஒப்படைக்கப்படாது 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது பணியகத்தினால் அக்காணி அமைந்துள்ள கட்டிடம் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 2,511,299 மூலதனச் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்கொண்ட செலவுகளுக்காக பணியகத்திற்கு எதுவித நலனும் கிடைத்திருக்காத போதிலும் மேற்கொண்ட செலவின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் 5 சதவீதப்படி பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 6.13 பதவியணியினர் நிர்வாகம்

### 6.13.1 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளல், மிகை, பற்றாக்குறை என்பன

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தென் மாகாணத்தின் கல்விச் சேவைக்கான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 250 | 176 | 99 | 25 |
| மூன்றாம் மட்டம் | 1542 | 917 | 625 | - |
| இரண்டாம் மட்டம் | 22610 | 23478 | 69 | 937 |
| ஆரம்ப மட்டம் | 1892 | 1744 | 153 | 05 |
| ஏனையோர் (அமையம்/தற்காலிகம்/ஒப்பந்த) | - | 39 | - | 39 |
| மொத்தம் | 26294 | 26354 | 946 | 1006 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 07 பதவிகளின் 99 உத்தியோகத்தர்களும் மூன்றாம் மட்டத்திலுள்ள 04 பதவிகளில் 625 உத்தியோகத்தர்களும் இரண்டாம் மட்டத்திலுள்ள 02 பதவிகளில் 69

உத்தியோகத்தர்களும் ஆரம்ப மட்டத்தின் 04 பதவிகளில் 153 உத்தியோகத்தர்களும் ஆக மொத்தம் 946 எண்ணிக்கையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஷ்ட மட்டத்தின் ஒரு பதவியில் 25 உத்தியோகத்தர்களும் இரண்டாம் மட்டத்தின் 02 பதவிகளில் 937 உத்தியோகத்தர்களும் ஆரம்ப மட்டத்தின் 02 பதவிகளில் 05 உத்தியோகத்தர்களும் ஆக மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 1006 உத்தியோகத்தர்களுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக 39 நபர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களின் பதவிகளை முறைப்படியாக்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென் மாகாணத்தின் கல்விச் சேவைக்குரிய அதிபர் மற்றும் ஆசிரிய பதவியணியினை சமப்படுத்தாமையின் காரணமாக மாகாணத்திலுள்ள 1050 மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்களின் மிகையும் அதிபர்களின் பற்றாக்குறையும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அது தொடர்பான பொழிப்பாக்கிய விபரம் கீழே தரப்படுகின்றது.

| வலயம் | அதிபர்களின் மிகையும் பற்றாக்குறையும் | | | ஆசிரியர்களின் மிகையும் பற்றாக்குறையும் | | |
|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | மிகை / (பற்றாக் குறை) | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | மிகை / (பற்றாக் குறை) |
| காலி | 205 | 168 | (37) | 2841 | 2967 | 126 |
| அம்பலாங்கொடை | 124 | 66 | (58) | 1649 | 1486 | (163) |
| எல்பிடிய | 173 | 99 | (74) | 2114 | 2043 | (71) |
| உடுகம | 100 | 55 | (45) | 1241 | 1290 | 49 |
| மாத்தறை | 165 | 133 | (32) | 2078 | 2472 | 394 |
| அக்குரெஸ்ஸ | 107 | 58 | (49) | 1432 | 1469 | 37 |
| முலடியன | 116 | 73 | (43) | 1531 | 1955 | 424 |
| மொரவக்க | 111 | 46 | (65) | 1333 | 1496 | 163 |
| ஹம்பாந்தோட்டை | 159 | 82 | (77) | 2272 | 2406 | 134 |
| தங்காலை | 140 | 43 | (97) | 1786 | 1936 | 150 |
| வலஸ்முல்ல | 125 | 81 | (44) | 1687 | 1956 | 269 |
| | 1,525 | 904 | (621) | 19,964 | 21,476 | 1,512 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 11 வலயங்களில் அதிபர்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டதுடன் ஒட்டுமொத்த பற்றாக்குறை 621 ஆகும்.

(ii) 9 வலயங்களில் 1746 ஆசிரியர்கள் மிகையாகக் காணப்பட்டிருந்தும் மிகுதியான 2 வலயங்களில் 234 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டனர்.

(iii) முலடியன, மாத்தறை, வலஸ்முல்ல ஆகிய வலயங்களில் குறிப்பிடத்தக்க அளவான ஆசிரியர் மிகைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(iv) உடுகம கல்வி வலயத்திற்குரிய 35 பாடசாலைகளில் அதிபர் பதவிக்காக ஆசிரியர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அதிபர் தரத்திலுள்ள அதிபர்கள் இணைத்துக் கொள்ளப்பட்ட 44 பாடசாலைகளில் 03 பாடசாலைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட தரத்தினை விட உயர்ந்த தரத்திலுள்ள அதிபர்களும் 04 பாடசாலைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட தரத்தினை விட குறைந்த தரத்திலுள்ள அதிபர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையினால் முறையான திட்டத்துக்கு இணங்க அதிபர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(v) 2015 ஆம் ஆண்டில் மொரவக வலய கல்வி அலுவலகத்தின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 78 பாடசாலைகளில் 33 பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

(vi) ஊழியர் முகாமைத்துவம் முறைப்படியாக நிறைவேற்றப்படாமையினால் மாத்தறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள 22 பாடசாலைகளில் அதிபர் பதவியானது பதில் கடமை அதிபர்களால் மேவுகை செய்யப்பட்டிருந்ததுடன் உரிய பதவிகளில் முறைப்படியாக அமர்த்தாமையின் காரணமாக இலங்கை அதிபர் சேவைக்கு பதவியுயர்வு பெற்றுள்ள அதிபர் தரத்திலுள்ள 45 அதிபர்கள் பிரதி மற்றும் உதவி அதிபர்கள் பதவியில் சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) எல்பிட்டி, காலி ஆகிய கல்வி வலயங்களுக்கு 2015 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் இடமாற்றம் பெற்று வந்த முறையே 07 ஆசிரியர்கள் மற்றும் 30 ஆசிரியர்களின் தனிப்பட்ட கோவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த உத்தியோகத்தர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள், கல்வித்தகைமைகள் மற்றும் சம்பளக் கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

6.13.2 தென் மாகாணத்தின் சுகாதார சேவை

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 1069 | 803 | 266 | - |
| மூன்றாம் மட்டம் | 240 | 158 | 82 | - |
| இரண்டாம் மட்டம் | 4681 | 3871 | 824 | 14 |
| ஆரம்ப மட்டம் | 3068 | 2591 | 484 | 07 |
| மொத்தம் | 9058 | 7423 | 1656 | 21 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 12 பதவிகளில் 266 உம் மூன்றாம் மட்டத்திலுள்ள 22 பதவிகளில் 82 உம் இரண்டாம் மட்டத்தில் 29 பதவிகளில் 824 உம் ஆரம்ப மட்டத்திலுள்ள 18 பதவிகளில் 484 உமாக காணப்பட்ட 1656 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இரண்டாம் மட்டத்திலுள்ள ஒரு பதவியில் 14 ஊழியர்களும் ஆரம்ப மட்டத்திலுள்ள பதவியில் 07 ஊழியர்களுமாக 21 ஊழியர்கள் மிகையாகக் காணப்பட்ட போதிலும் அம்மிகைப் பதவிகளை முறைப்படியாக்குவதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(இ) காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உதவி உத்தியோகத்தரையும் இரண்டு சாரதிகளையும் அலுவலக உதவியாளர் ஒருவரையும் 07 சுகாதார உதவியாளர்களையும் உள்ளடக்கி 11 நபர்கள் ஏனைய நிறுவனங்களின் சேவைக்காக விடுவிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து 2015 திசெம்பர் 31 வரை ரூபா 8,961,494 கூட்டுத் தொகையான சம்பளங்களும் படிகளுமாக தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அவர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) (i) 2011 ஜூன் 01 ஆந் திகதி சுகாதார உதவியாளர் பதவியைப் பெற்றுக்கொண்ட நபர் அந்த ஆண்டின் திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2014 சனவரி 12 வரை தென் மாகாண சபை பிரதித் தலைவரின் பதவியணியில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். 2014 சனவரி 12 ஆந் திகதி மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் அவரின் சேவை நிலையம் தொடர்பான எதுவித விசாரணையும் அல்லது தகவலும் இல்லாதிருந்த போதிலும் அத்திகதியிலிருந்து 2016 பெப்ரவரி வரையான காலம் தொடர்பாக சம்பளமும் படிகளுமாக ரூபா 746,811 தொகை அவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2011 திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2016 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் சீருடைப் படியாக ரூபா 42,712 தொகையும் அவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 7. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 7.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2000 ஜூன் 12 ஆந் திகதிய IAI/2000/1 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் 2007 சனவரி 26 ஆந் திகதிய 5/2007 ஆம் இலக்க தென் மாகாண சபை (நிதி) சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆகக் குறைந்தது ஒரு காலாண்டிற்கு ஒரு கூட்டம் வீதம் ஆண்டிற்கு நான்கு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 20 நிறுவனங்களால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பான பொழிப்பாக்கிய விபரம் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | நிறுவனங்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2015 | 07 | எக்கூட்டமும் நடாத்தப்படவில்லை |
| - மேற்படி - | 03 | ஒரு கூட்டம் வீதம் நடாத்தப்பட்டிருந்தது |
| - மேற்படி - | 05 | 2 கூட்டங்கள் வீதம் நடாத்தப்பட்டிருந்தன |
| - மேற்படி - | 05 | 3 கூட்டங்கள் வீதம் நடாத்தப்பட்டிருந்தன |

7.2 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒரு அமைச்சு, 02 திணைக்களங்கள், 02 அலுவலகங்கள், ஒரு ஆணைக்குழு, 04 அதிகாரசபைகள் என்பவற்றை உள்ளடக்கிய 10 நிறுவனங்களால் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

7.3 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 16 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக பதில்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்தன. இக்கணக்காய்வு ஐய வினாக்களில் உள்ளடக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 159,875,637 ஆகும்.

(ஆ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 56,678,016 மொத்த தொகையான மீளச்செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல்களிலிருந்து காலங்கடந்த வைப்பு மீதிகளைத் தீர்த்துவைக்கும் தேவைப்பாடு முன்னைய கணக்காய்வு அறிக்கைகளிலும் மாகாண பொது கணக்குகள் குழு தீர்மானத்தின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் காலத்துக்கு காலம் பிரதம செயலாளர் அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது வழமைக்கு மாறான காலதாமதங்கள் காணப்பட்டன.

(iii) நிலையான சொத்துக்களை கணக்குவைத்தல் தொடர்பாகப் பின்பற்றப்பட்ட அடிப்படையானது கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) பொருள் மெய்மையாய்வை நடாத்துவதில் காலதாமதம் காணப்பட்டது.

(v) குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமான மதிப்பீட்டினைத் தயாரித்தலும் வருமான சேகரிப்பும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முறையான ஆய்வு மற்றும் மதிப்பீட்டுடன் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மதிப்பிடப்பட்ட வருமான இலக்கை அடைந்துகொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) வருமான மதிப்பீடு தொடர்பான பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சில வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட வருமான எல்லைகளை மிகைத்து உள்ளபடியான வருமானம் காணப்பட்டன.

(v) நிலுவை வருமானங்களைச் சேகரிப்பது தொடர்ச்சியாக தாமதமடைந்து காணப்பட்டது.

(இ) செலவு மதிப்பீடும் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதலும்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 10 செலவுத் தலைப்பின் கீழுள்ள 19 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,262,000 கூட்டு மொத்தமான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 21 செலவுத் தலைப்பிற்குரிய 127 செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய சேமிப்புக்கள் காணப்பட்டன.

(iii) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழுள்ள ஒரு செலவின விடயத்திற்கான ரூபா 9,000,000 தொகையான முழு ஏற்பாடும் 3 தலைப்புக்களுக்குரிய 07 செலவின விடயங்களின் 40 சதவீதத்திலிருந்து 93 சதவீதம் வரையான வீச்சிலும் சேமிக்கப்பட்டிருந்தது.

(iv) வரிசை அமைச்சின் மூலம் ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 68 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்துவைத்தல்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளுக்கான மீதிகளின் உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

(ii) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்துவைத்தல் தொடர்ச்சியாக தாமதமடைந்து காணப்பட்டது.

(உ) கணக்கீடு

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுவதாக கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் வருமானம், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) பொதுவைப்புக் கணக்கின் மீதியைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வைப்புக் கணக்கு மீதி மற்றும் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதி என்பன தொடர்பாக திணைக்களத்தின் கணக்குகளுக்கும் மாகாண திறைசேரியின் கணக்குகளுக்குமிடையே இணக்கமின்மைகள் காணப்பட்டன.

(iv) மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்கும் வணிக முற்பணக் கணக்குகளுக்குமான எல்லைகளை மிகைத்தலும் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லைகளை அடைந்து கொள்ளாமையும் காணப்பட்டன.

(v) நிலையான சொத்துக்கள், நிலுவை வருமானம், பொறுப்புக்கள் என்பன தொடர்பான விபரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.